ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஹூ ஆனி-மீ ௧௬ உ

சம உரிமை.

தற்காலத்தில் சில மேதாவிகள் அதிகாரப் பதவியிலும் வித்யாப்யாஸாநுஷ்டான முறைகளிலும் கைத் தொழில் வியாபாரம் முதலியவற்றிலும் மற்றுமுள்ள விஷயங்களெல்லாவற்றிலும் ஜனங்களுக்கு ஸம உரிமை அந்தஸ்து இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். பல ப்ரசங்க மேடைகளிலுமிவ்விஷயத்தை விஸ்தாரமாக எடுத்துரைத்து பஹிரங்கப்படுத்தவும் செய்கிறார்கள். அவ்வுபன்யாஸத்தைச் செவியுற்ற நம்மவரில் பெரும்பாலோர் அவ்விஷயத்தை ஆமோதிக்கவும் அநுசரித்து நடக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள் இதுவுங் காலத்தின் கோலமே ஒழிய வேறல்ல. விஷமமாகவும் விசித்திரமாகவும் உள்ள பிரும்ம ஸிருஷ்டியில் எல்லோரும் ஒரே மாதிரியாகவே இருக்கவேண்டும் என்பது ஒருக்காலும் முடியாது. இது மானிடவர்க்கத்தின் அநாகரிக நிலையைத்தான் வெளிக்காட்டும் இந்த ஸமத்வநிலையால் உலகத்திற்கும் நன்மையில்லை. சண்டையும் கஷ்டமும்தான் பயனாக முடியும். கண் வேறு, காதுவேறு, மூக்கு வேறு நாக்கு வேறு, கை வேறு, கால்வேறு, வாய்வேறு என்ற நிலையிலும் சரீரம் நன்றாகவுழைத்து சரீரத்திலுள்ள சகல அங்கங்களும் சுகம் பெறும்பான்மையைக் கவனிக்க வேண்டாமா? எல்லா அங்கங்களும் ஒரே வேலையைச் செய்தல் நலமாக முடியுமா? அவைகளுள் ஸமத்வமுண்டா? எல்லோரும் வியாபாரிகளாகவும் அல்லது தொழிலாளிகளாகவும் உத்யோஹஸ்தர்களாகவும், கல்விமான்களாகவும் ஏழைகளாகவும் எப்படியிருக்க முடியும்? மேனாட்டிலுள்ள வேலைக்காரனுக்கு மாதம் ரூ. 400. சம்பளமாயிருந்தால் இந்தியாவிலுள்ள ஊழியக் காரனுக்கு அவ்விதமேயல்லவா சம்பளம் அமைக்க வேண்டும். இன்றேல் ஸமத்வவாதத்திற்கு அர்த்தமில்லை என்று ஏற்படும்.

ஸ்த்ரீபுருஷ ஸமமென்றால் எந்த முறையில் சமம் என்பதை விவரிக்க வேண்டும். புருஷர்களைப்போல் ஸ்திரீகளும் ஆகவேண்மென்றால் ஸ்திரீகள் ப்ரஸவிக்கும் வேலையை நிறுத்திக்கொண்டு அவர்களை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி விட்டுவிட்டு புருஷர்களே ப்ரஸவிக்கத் தொடங்கவேண்டும். சிசு பரிபாலனமும் புருஷர்களைத் தான் சாரும், இவ்விதம் செய்தால் ஸ்திரீகள் புருஷர்களுக்குச் சமமாவர். ஸ்த்ரீகளின் சுதந்திரங்களைப் பற்றி ஹிந்து மதசாஸ்திரங்கள் நல்லபிப்பிராயங்களைத் தான் வெளியிடுகின்றன. ஸ்திரீகளை மிருகங்களைப்போல் நடத்தாதே ஸ்திரீ என்பவள் க்ருஹலக்ஷ்மி தேவி, அவளைக் கல்விகற்கும்படிச் செய்து ஸரஸ்வதி விக்ரஹமாகவும் செய். கணவனுக்குப் பணிவிடை செய்யும்முறையை போதனை செய். குழந்தைகளைப் பாதுகாக்குமாறு செய். கிருமவாதினியாகவும் செய். என்று ஹிந்து சாஸ்திரங்கள் போதிக்கின்றன, இதுதான் உண்மையாகவும் சாச்வதமாயுமுள்ள ஸ்திரீபுருஷஸமத்வமாகும். இதைவிட்டு மேனாட்டு முறையில்தெரிவிக்கின்ற ஸ்திரீ ஸ்வதந்திர வாதத்திற்கு அர்த்தமேயில்லை. ஆனால் அனர்த்தம் அதிகம் உண்டு மேனாட்டு ஸமத்வவாதம் ஏற்பட்டால் ஸ்திரீகள் புருஷர்களுடன் கடற்கரையிலும் ரயிலடியிலும் கைக்கோர்த்து செல்வதை முற்றிலும் பெரும். அது நமக்குத் தேவையில்லை. இது மேனாட்டினருக்கே. அறவெறுப்பைத்தரும் அனுகரிகச் செயலாகும். தேவையானால் அவர்களுக்கே இது இருக்கட்டும்.

கூடியசீக்கிரத்தில் அவர்களுங்கூட இதைத் தள்ளிவிட்டு நம்வழிக்கு வந்துவிடுவார்கள். நமது ஸ்திரீகள் வீட்டுக்குள்ளேயேயிருக்கட்டும். அங்கிருந்துகொண்டே அந்த நன்மைகளை உண்டாக்கலாம். வெளியே செல்லவேண்டாம். இம்மேனாட்டு நாகரீகம் ஸ்திரீகளுக்கும் தற்காலத்தில் பரவிவிட்டது. தற்கால நாகரீக ஸ்திரீகளினிடமும் குடும்பவாழ்க்கையும் ஹீனந்தான், ஆதலாலுண்மையான ஸமத்வ வழியை அனுஸரித்து நடப்பதே நமது கடமையாகும். தானும் கெட்டுப் பிறரும் கெடும்படியான மார்க்கத்தில் நடப்பது கூடாது. இதற்கு சுயபுத்தி வேண்டும், குருவசனமும் அமுதக்கொப்பாகும். பிறர் புத்தி நாசஞ்செய்யும். ஸ்திரீபுத்தி பிரளயத்தில் கொண்டுவிடும். ஆகவே இவைகளை அறிந்து வாழ்வோமாயின் உண்மை ஸமத்வநிலையில் நாம் முன்னுக்கு வரலாம்,

---

ராஜபக்தி.

அரசர்களைத் தெய்வமாக கோஷிக்கும் ஹிந்துமதக் கிரந்தங்களில் நாம் நமது அரசரிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமேயாகும்.

மானிடஜென்மமெடுத்த யாவருக்கும் பக்தி என்பது வேண்டும். அதில் தெய்வபக்தி, பிதிரு பக்தி, குரு பக்தி, மத பக்தி, தேச பக்தி, ராஜ பக்தி, இவை 6-ம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியதும் அவைகளை அனுஷ்டிக்கவேண்டியதும் அத்யாவச்யகமாகும். இவைகளில் சிலவற்றைமட்டும் கைக்கொண்டு சிலவற்றை நிஷேதிப்பது ஸரியில்லை.

சாஸ்திரங்கள் அரசனை தெய்வாம்சம் பெற்றவனென்று போற்றுகின்றன. இதனால் ராஜனிடம் செலுத்தவேண்டிய பக்தியில் தெய்வபக்தியும் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும் என்பது ஹிந்து சாஸ்திரங்களின் அபிப்பிராயம். ராஜபக்தியை எதற்காகச் செய்யவேண்டும்? அது அவசியமாவென்று சிலருக்குத் தோன்றக்கூடும். அது ஸரியல்ல.

ஈச்வர ஸிருஷ்டியில் அனேக்கோடி ஜீவராசிகளிருக்கின்றன. ஒவ்வொரு ஜீவராசிகளுக்குத் தனித்தனியாகச் சுபாவமுமமைந்திருக்கின்றது. அப் பிராணிகள் எல்லாவற்றையும் தம் தம் சுபாவத்தை அனுஸரித்து நடக்கும்படி செய்வது அனுசிதம், அதர்மம், அனீதியுமாகும். அப்படியே விட்டுவிட்டால் ஜீவராசிகளில் பலமுள்ளவைகளுக்கு பல ஹீனமுள்ள ஜந்து இறையாக முடிவது ஸஹஜமாகிவிடும். இவ்வித பயங்கர நிலையில் இவ் வுலகம் நாசமடையாமலிருப்பதற்காகவே பரமேசுவரன் ராஜனை ஸிருஷ்டி செய்திருக்கிறார்.

இவ் விஷயத்தை

अराजके हि लोकेस्मिन्सर्वतो विद्रुते भयात् ।

रक्षार्थमस्य सर्वस्य राजानमसृजत्प्रभुः ॥

என்ற சாஸ்திர வசனமும் தெரிவிக்கின்றது. அது எப்படி என்றால் ஈசுவரன் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட உலகத்தை இரட்சை செய்வதற்காக, தாமே திக்பாலகர்களாக அமைந்துள்ளார். அவ்

வித திக்பாலகர்களிடமிருந்தும் ஒவ்வொரு அம்சம்பெற்று இப் பூவுலகைப் பாதுகாக்கும்பொருட்டு ராஜவடிவமாக அவதரித்தி ருக்கிறர். இதுவும்.

इन्द्रानिलयमार्काणामग्नेश्च वरुणस्य च ।
चन्द्रवित्तेशयोश्चैव मात्रा निर्हृत्य शाश्वतीः ॥

என்ற பிரமாணமூலமாக விசதமாகின்றது. இந்திரன், யமன், வாயு, சூரியன், அக்னி, வருணன். சந்திரன். குபேரன் இவர்க ளுடைய அம்சங்களினின்றும் ராஜாவாய் அவதரித்திருப்பதால் தான் அரசன் சகல ஜீவராசிகளையும் இரட்சை செய்வதற்குப் போதிய வீரியமும் மஹத்வமும் உடையவனுக யாவராலும் அங்கீ கரிக்கத்தக்கவராகின்ருன்,

यस्मादेषां सुरेन्द्राणां मात्राभ्यो निर्मितो नृपः ।
तस्मादभिभवेदेष सर्वभूतानि तेजसा ॥

இவ்விஷயமும் என்ற வசனத்தால் புலப்படுகின்றது.

இதனுல் ராஜன் தெய்வீகத்தன்மை வாய்ந்தவன் என்பது பிரத்தியக்ஷ அனுபவமேயாம். அரசன் உலக ஸம்ரக்ஷணையின் பொருட்டு ஒவ்வொரு திக்பாலகர்களுடைய ஒவ்வொரு தர்மங்க ளையும் நடத்திவருகின்ருன் என்பதும் ஸ்மிருதி ஸித்தந்தான். அதாவது

1. அக்னி தன்னையாச்ரயித்த வஸ்துக்களை பக்வம் பண்ணு கிறது. ஜனங்களுக்கு வேண்டிய ஆகாராதிகளையும் பக்குவப் படுத்தி உதவுகின்றது. அதுபோல் அரசனும் தன்னை எதிர்த்த சத்துருக்களை நாசமாக்கித் தனது குடிகளைக் காப்பாற்றியும் வரு வது அக்னி தர்மம்.

2. வாயு, சகலப் பிராணிகளுக்குள்ளும் புறமும் நின்று கொண்டு சரீர தோஷங்களை விலக்கியும், ஆரோக்கியத்தை உண் டாக்கியும், இரத்தத்தைச் சுத்திசெய்தும்வருகிறதுபோல அரசன் நாஸ்திக புத்திகளையும், ராஜத் துரோகிகளையும், துஷ்ட ஜந்துக்க ளையும் ரோகத்திற்கு ஆரம்ப காரணங்களையும், துராசாரங்களையும் இன்னும் ராஜ்யத்துக்குக் கெடுதல் உண்டுபண்ணக்கூடிய சகல விஷயங்களை நீக்கியும், குடிகளுக்குத் தேவையாயுள்ளவற்றை எல்லாம் போஷித்தும், குடிகளை ஸமாதானமுறையில் அடக்கி ஆள்வது வாயு தர்மம்.

3. சூரியன் பூமியின்கண்ணுள்ள குளம், குட்டை வாய்க்கால், ஆறு, ஸமுத்திரம் முதலியவிடங்களிலிருந்து, ஜலத்தைப் பல தடவையாக இழுத்து ஆகாசத்தில் சேர்த்துவைத்துக்கொண்டு பயிர் வளர்ச்சிக்கும், ஸ்நாநபானத்திற்கும் நன்மையளிக்கும்பொருட்டு பலதடவைகளாக மழையாகப் பெய்து நன்மை உண்டுபண்ணுவதுபோல் அரசன் குடிகளிடம் பலதடவைகளாக வரி வசூலித்து பொக்கிஷத்தில் சேர்ப்பித்து அதைத் திரும்பவும் ஜனங்களின் நன்மையின்பொருட்டே பாடசாலை, சுகாதார பரிபாலனம், நியாய பரிபாலனஸ்தலம் முதலிய பலவிஷயங்களில் சிலவு செய்து நன்மையளிப்பது சூரியதர்மம்.

4, சந்திரன் பகற்காலத்தில் சூரிய வெப்பத்தால் வாடிய செடி கொடிகளுக்குக் குளிர்ச்சியையும், யாத்திரிகர்களுக்கு உத்ஸாஹத்தையும், விருத்திசெய்தபோதிலும் திருடர்களுக்குமட்டிலும் மஹா பயத்தை உண்டுபண்ணுகிறனென்பதுபோல் அரசன் தம் வீர்யம், தேஜஸ், ஸத்யம், தர்மம். முதலிய சுபாவ குணங்களால் தம் பக்தர்களாகிய ஸாதுக்களுக்குச் சமாதானத்தையும், பயமின்மையையும்; ராஜ விரோதிகளுக்கும், துஷ்டர்களுக்கும் சத்துருக்களுக்கும் பயத்தையும், கிலேசத்தையுங் கொடுப்பது சந்திர தர்மம்.

5. யமன், குற்றம் செய்தவர்கள் உயர்ந்தவர்களோ? தாழ்ந்தவர்களோ? எப்படியிருந்தபோதிலும், அவைகளைச்சிறிதுங் கவனியாமல் அவரவர்கள் கர்மாவிற்குத் தக்கபடி தண்டிக்கும்படி தம் கிங்கார்களுக்குக் கட்டளையிடுவதுபோல் அரசனும் பெரிய உத்தியோகஸ்தனாவது, சிறிய உத்தியோகஸ்தனாவது உயர்ந்த ஜாதிக்காரனாவது, தணிந்த ஜாதிக்காரனாவது, கோடீசுவரனாவது, தரித்திரனாவது, வித்வானாவது, மூடனாவது இந்து மஹம்மதியன் புத்தன், கிருஸ்து எனச் சிறிதும் பேதம் பாராட்டாமல் அவரவர் குற்றத்திற்குத் தக்கபடி தண்டனைசெய்யுமாறு தமது உத்தியோகஸ்தர்களுக்கு ஆக்ஞையிடுவது யம தர்மம்.

6. குபேரனைப்போல் அரசன் தம் பொக்கிஷத்தை விருத்தியடையும்படி செய்துவருவது குபேர தர்மம்.

7. வருணன், பொய் ஸத்தியம் பண்ணுகிறவர்களையும், தானம்செய்யப்பட்ட பொருள்களைக்கொடாமல் அபஹரித்தவர்களையும், தமது சேனைகளாகிய நண்டு, மீன், திமிங்கலம், முதலிய

துஷ்ட ஜந்துக்களால் கடிக்கும்படிக்கும் குத்தும்படிக்கும் செய்து வாதனைப்படுத்துவதுபோல் அரசனும் கொடுக்கல் வாங்கல் செய்வதில் திரும்பிக்கொடாமல் பிறட்டு, நம்பிக்கை, மோசம், பொய்சாக்ஷியம் முதலிய காரியங்களை அனுஷ்டிக்கும் துஷ்டர்களை போலீஸ் அதிகாரிகளால் காராகிருஹத்திலடைப்பது வருண தர்மம்.

8. இந்திரன் தம்மிடம் பக்தர்களாகிய ஜனங்களுடைய ஆபத்துக்களைப்போக்கி ஸகல ஸம்பத்துக்களையும் கொடுப்பான். அது போல அரசன் தம்பக்தர்களுடைய இடையூறைத் தீர்த்து ஸகல வித சௌகரியங்களையும் செய்து உதவி புரிவது இந்திர தர்மம்.

இவ்விதமிருப்பதனால் தான் அரசன் சிறு குழந்தையாயிருந்த போதிலும் சாதாரண மனிதனாக நினைத்து ஒருவரும் அவமதிக்கக்கூடாதென்று ஹிந்துமத சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

உலகத்தில் ஜனங்கள் எல்லோரும் ஒழுங்கான நடையிலிருப்பது துர்லபம். அனேகர் தப்பிதம் செய்தால் போலீஸ்காரரால் தடியடி கிடைக்குமென்பதற்கும் தண்டனையடைந்தால் ஜெயிலில் படும் துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் பயந்தே யோக்கியர்களாகவிருக்கிறார்கள். ஒன்றுக்கும் அடங்காதவர்களுக்குத் தண்டப் பிரயோகம் தான் அவசியமாகும். இது ராஜநீதியே! ஆகவே ஸாமதானபேததண்டம் என்ற நான்கு முறைகளையும் அரசன் அனுஷ்டிப்பது அவசியமேயாகும். புண்ணியபூமியாகிய இந்தியா தேசமானது எக்காலத்திலும் ராஜபக்தியில் சிறந்தது பிரஜைகளுக்கும் அரசர்களுக்கும் விரோதம் பூட்டுவது வெகுசுலபம். பிரஜைகளையும் அரசரையும் சாந்தமாக வாழச்செய்வது அரிது. நமக்கு சத்துரு நாமேயன்றி வேறொருவருமல்ல. நமக்கு மித்திரர்களுக்கும் நாமே தான் என்பதைக் கைவிடாமல் நடப்பது தான் எல்லோருக்கும் நன்மையளிக்கும் நாம் விருப்பு வெறுப்புக்களுக்கும் கோபதாபங்களுக்கும் நம்மை இரையாக்கிக்கொள்வது உசிதமில்லை. நாம் ஒற்றுமையை ஒருபோதும் கைவிடலாகாது. நாம் ஒற்றுமையை உண்மையாக விரும்பும்போது அரசாங்க நீதியும் நம் பக்கம் நின்றுவிடும். ஆதலால் மேன்மைபொருந்திய ராஜ விசுவாஸத்தால் நாம் க்ஷேமம் பெற்றுவிளங்கும்படி செய்ய பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

ஐந்தையும் மூன்றையும் தெரிந்துகொள்ளவேண்டுமா?

ஆம், அவைகளைத் தெரிந்துகொள்ள ஆசைதான்; உள்ளபடி அவைகளை வெளியிட்டால், ரொம்பவும் திருப்திக்கிடமுண்டாம். தன்னைத்தானே ஸாவதானமாய் விசாரிக்கவேண்டும்.

भूमिरापोऽनलो वायुः खं मनोबुद्धिरेव च ।
अहङ्कारइतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥४॥
अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ॥
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥५॥

பூமி. ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், மனது, புத்தி, அகங்காரம் ஆகிய இவ்வெட்டும் பிரகிருதியிலிருந்து பின்னப்பட்டு வெளிவந்தன. இவைவெயட்டும் அபராப் பிரகிருதியென்று, இதனிலும் உத்கர்ஷமான ஜீவஸ்வரூபமான பராப்பிரகிருதியாலே, ஜகத்தெல்லாம் வகிக்கப்படுகின்றனவென்றும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம்.

பூமி முதலிய ஐந்து பூதங்களையும் கணக்கிட்டுப் பின்னர் சரீரத்திடையுள்ள அந்தக்கரண ஸம்பந்தமான மனது, புத்தி, அஹங்காரம்மூன்றையுஞ்சேர்த்துஎட்டாக்கிபிரகிருதியின் பின்ன விசேஷங்கள் என உபதேசித்ததின் நோக்கமென்ன வென்றால், ஐந்து பூதாம்சங்களால் அமைக்கப்பெற்ற ஐந்து ஜோடி இந்திரியங்களும், (காது: வாய்; ஆகாசம்—தோல்: கை; வாயு—கண்: கால்; அக்கினி—நாக்கு: குதம்; ஜலம்—மூக்கு; குஹியம்; பூமி) மூன்று குணாம்சங்களால் அமைக்கப்பெற்ற மனது—தமஸ், ஆகிய குணங்கள் மூன்றும் பூதங்கள் ஐந்தும் இவைவெயட்டும் அபராப் பிரகிருதியின் பின்னவிசேஷங்கள்.

சரீரத்தில், அந்தக்கரணம், மனது, புத்தி, அகங்காரம், சித்தம் என நான்காகவல்லவா விசாரிக்கப்பட்டிருக்கிறது. மனது, புத்தி, அகங்காரம் மூன்றும் முக்குணங்கள் ஆனால் சித்தத்தின் பாடென்ன? சாரீரகவிசாரணையில் சித்தத்தின் பெருமை சொல்லவும் எழுதவும் இரண்டிற்கும் எட்டாதாம். மூன்றும் ஐந்தும் அபின்னமாய் ஒன்றுபட்டுப் பிரகாசிக்கும் உத்கர்ஷமான பராப் பிரகிருதி துலங்குமிடம் எதுவோ அதுவே சித்தமாம்: நாபிஸ்தானம்.

மூன்றுகுணங்களும் ஐந்துபூதங்களும் சூரியனிடமிருந்தல்லவா வெளிப்பட்டனவென்று சுருதிமுதலான பிரமாணங்கள் முறையிடுகின்றன. வாஸ்தவமே:

नमः सवित्रे जगदेकचक्षुषे जगत्प्रसूतिस्थितिनाशहेतवे ।
त्रयीमयाय त्रिगुणात्मधारिणे विरिञ्चिनारायणशङ्करात्मने ॥
सूर्याद्वै खल्विमानि भूतानि जायन्ते ॥

திரிகுணாத்மகனும் திருமூர்த்தியாயும் ஜகத்தில் பிரகாசிக்கிற சூரியன் சரீரத்தில் நாபிஸ்தானத்தில் க்ஷேத்திரக்ஞனாக விளங்குகிறான். ஸமஷ்டியில் (ஜகத்தில்) தென்படும் சூரியன், வியஷ்டியில் (சரீரத்தில்) க்ஷேத்திரக்ஞனாக அறியப்படுகிறான். சூரியனுண்டானால் ஜகத்துண்டு அதேபோல க்ஷேத்திரக்ஞன் உண்டானால் சரீரம் உண்டு.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥३॥

சரீரமே க்ஷேத்திரம். அதேசரீரத்தில் வஸிக்கிறான் க்ஷேத்திரக்ஞன்· பிரகிருதியே க்ஷேத்திரம்; அதில் இருக்கிறான் புருஷன்· பின்னப்பட்டு (சரீரத்தில் இந்திரியங்களாகவும் அந்தக்கரணங்களாகவும் விளங்கும்) இப்பிரகிருதிக்கு குணகர்ம நாசம் ஏற்பட்டால் எப்பொழுதும் புருஷனுடன் ஸங்கம் ஏற்பட்டு சித்ரூபமாக பிரகாசிக்கிறது. இது முக்தியோகமாகும். அப்படியின்றி, குணகர்மங்களோடு கூடின பிரகிருதியின் ஸாந்நித்தியத்தால் பாதிக்கப்பட்ட புருஷன் அடிக்கடி ஸம்ஸாரியாகிறான். அதாவது மூன்றவஸ்தைகளுக்கும் உட்படுகிறான்; ஜாகரிதம் (நினைவு) ஸ்வப்பனம் (கனவு) ஸுஷுப்தி (உறக்கம்) ஆக மூன்று. இந்த உபாதிதோஷம் க்ஷேத்திரக்ஞனுக்கு இல்லாததால் ஸ்ரீபகவான் அர்ச்சுனனிடம் தன்னை க்ஷேத்திரக்ஞனாக அறிந்துகொள்ளும்படி உபதேசித்தகாரணம்.

ஸமஷ்டியில் (ஜகத்தில்) பிரும்மா சிருஷ்டிக்கிறார்; விஷ்ணு பரிபாலிக்கிறார்; ருத்திரன் ஸம்ஹரிக்கிறார். மூன்று மூர்த்திகளும் சூரியனிடமிருந்தே வெளிப்பட்டவர்கள். முடிவில் மூவர்களும் சூரியனிடமே லயமடைவார்கள். அந்த சூரியனும் ப்ரமத்தில் லயமடையவேண்டியதுதான். வியஷ்டியில் (சரீரத்தில்) நேத்தி

ரஸ்தமாக ஜாகரிதாவஸ்தையும், கண்டஸ்தமாக ஸ்வப்னவஸ்தையும், இருதயஸ்தமாக ஸுஷுப்தியவஸ்தையும் நடைபெறுகின்றன. மூன்றவஸ்தையையும் ஸாம்ஸாரிகம், அசுவத்தம், ப்ரம்மவிஷ்ணு ருத்திராத்மகம் என்றும் விவரிக்கப்படுகிறது. நேத்திரஸ்தானத்தில் ப்ரம்மாவும், கண்டஸ்தானத்தில் விஷ்ணுவும் இருதய ஸ்தானத்தில் ருத்திரனும், வாஸஞ்செய்கிறார்கள். நேத்திரங்களின் மத்தியத்தில் (வதனத்தில்) புத்தியும், கண்டமுடியில் மனதும், இருதயத்தில் அஹங்காரமும், நாபியில் சித்தமும் பிரகாசிக்கின்றன.

முக்திக்கு வழிதேடி ஜிதேந்திரியனான ஒரு யோகியின் சரீரத்தில் இந்திரியங்கள் பிரத்தியாஹாரத்தை (ஆத்மஸாம்யத்தை) அடைந்தால் மனது, புத்தி, அஹங்காரம் மூன்றும் வியஷ்டியில் மும்மூர்த்திகளும் ஸூரியனிடம் (ஆதி நாராயணனிடம்) லயத்தை அடைவதுபோல, வியஷ்டியில் சித்தத்தினிடம் (க்ஷேத்திரக்ஞனிடம்) லயமடைகின்றன.

ஐந்து பூதங்களையும் மூன்று குணங்களையும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒப்பற்ற விசாரணையில் நார்கள் முதலாவதாயும் முக்கியமாயும் கவனிக்கவேண்டியவை ஐந்து பூதங்களுள் பூமியையும், மூன்று குணங்களுள் தமஸ்ஸையுமே, சரீரத்தில் பூமியின் அம்சமாய் கிராணம் (மூக்கு) என்ற ஞானேந்திரியம் ஒன்றும், குஹியம் என்ற கர்மேந்திரியம் ஒன்றும் உள்ளன. இவையிரண்டும் ஸ்தூலத்தில் உள்ளன. ஸூக்ஷ்மத்தில் அந்தக்கரண சதுஷ்டயத்தில் ஒன்றான அஹங்காரம்,குணாம்சத்தில்தாமஸம் ஜீவர்கள் ஜன்ம (கர்ம) நாசத்தையடையவேண்டுமானால், அகங்காரம், குஹியம் இவ்விரண்டினால் உண்டாம் தோஷங்களை விலக்கமுயலவேண்டும். அகங்காரத்தினின்றுண்டாம் தோஷம் மமகாரமும், குவஹித்தினின்றுண்டாம் தோஷம் விஷயபோகமுமே. அகங்காரத்தின் சேஷ்டையை க்ஷுத்தின் (பசியின்) பீடையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். பசி ஒரு பிராரப்தகர்மம். போஜனத்தால்தான் தணியும். பசியைத்தணிக்க உட்கொள்ளும் போஜனத்தின் நிலமையைப் பொறுத்தது மமகாரத்தின் வலிமை. பசிதான் சரீரத்தில் ஜாடராக்கினியாக (வைசுவாநரரூபியாக) விசாரிக்கப்பட்டிருக்கிறது. அக்கினிக்கு திருப்திவரவேண்டுமென்று ஒருவர் கையில் கிடைத்ததையெல்லாம் சேர்ப்பித்துக்கொண்டிருந்தால், போட்ட

தையெல்லாம் பஸ்மமாக்கித் தான்பெரிதாகுமே தவிர, எப்படிக் குறைவுபடாதோ அப்படியே பசியும் விதவிதமான ஆகாரங்கள் கிடைப்பதால் பெரிதாகி, மமகாரத்தை விருத்திபண்ணி, கர்மேந்திரியத்தை உத்ஸாகப்படுத்தி, விஷயபோகத்தில் சிக்கவைத்து முடிவில் ரோகத்துவாரா இருணாகில் புகுத்திவிடும். 'ஊண் அடங்கவிண் அடங்கும்' என்றார்கள் பெரியோர்கள். ஸ்ரீபகவானும், विषयाविनिवर्तंते निराहारस्यदेहिन: என்று கீதையில் உபதேசித்திருக்கிறார். இவ்வாறு வலிமையான ஆசையைத் தடுத்து க்ஷுபாதையினிமித்தம் கிடைத்ததை உண்டு பிராரப்த கர்மத்தை சமனப்படுத்தி வசப்படுத்திவந்தால்

स्त्रियं त्यक्त्वा जगत् त्यक्तं जगत् त्यक्त्वा सुखीभवेत् ।

என்றவிதம் சுருதிகாட்டும் வழி ஸ்திரீ ஸஹவாஸத்தை ஒழித்து கிரமமாய் ஜகத்தின் ஸம்பந்தத்தை விடுத்து ஒருவர் ஸுகியாகி உறுதிகொண்டிருக்கலாம்.

மேலும் ஐந்து பூதங்களும் ஒரேவிதமான சுத்தியுள்ளனவாகாவாம். பூமியைவிட ஜலத்திற்கு சுத்தி ஜாஸ்தி; ஜலத்திற்கு அக்கினிமேல்; அக்கினிக்கு வாயுமேல்; வாயுவுக்கு ஆகாசம்மேல். ஆகாசத்திற்குசப்தம் மாத்திரம் குணம்; வாயுவுக்குசப்தம், ஸ்பர்சம் ரூபம், ரஸம்; பிருதிவிக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் சிரவணதோஷத்திற்கு ஏற்படும் சிக்ஷையைவிட, ஸ்பர்சனதோஷத்திற்கு அதிகசிக்ஷை; தர்சன தோஷத்திற்கு ரொம்பவும் கூடுதல்; கடைசியான விபசாரதோஷத்திற்கு (விஷயபோகதோஷத்திற்கு) ப்பூர்ணசிக்ஷை.

ஸாதாரணமாய் துர்க்கந்த பரிசயத்தால் (துர்க்கமனத்தால்) சரீரத்தில் பூமியின் அம்சமான இந்திரியங்களுக்கு துர்போஜனத்தால், பூமி, ஜலம், இவைகளின் அம்சமான இந்திரியங்களும், துர்தரிசனத்தால், பூமி, ஜலம், அக்கினி இவைகளின் அம்சமான இந்திரியங்களும், துஷ்ஸ்பர்சனத்தால், பூமி, ஜலம், அக்கினி, வாயு, இவைகளின் அம்சமான இந்திரியங்களும், துச்சிரவணத்தால், பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், இவைகளின் அம்சமான இந்திரியங்களும் கெட்டுப்போகின்றன. ஒருவன் செய்யும் பாபம் அவன் ஸந்ததியையும் பிடிக்குமேதவிர, அவன் முன்னோர்களைப் பிடிப்பதில்லை, என்றபடி, சரீரத்தில் இந்திரியங்களெல்லாம்

ஆகாச ஸம்பந்தத்தில் சப்த லக்ஷணத்துடனும் பிரகாசிப்பதால் கெட்டுப்போகின்றன.

ஆகையால், நாங்கள் சைசவத்தில் (சிறு வயதில்) சிரவண தோஷம் எற்படாத விதம் வித்யாப்பியாஸம் செய்து, யௌவனத்தில் (வாலிபத்தில்) ஜிதேந்திரியராகிவிடாத அப்பியாஸத்தால், முக்திமார்க்கத்தில் நின்று, புருஷார்த்தத்தை யடைவதே ஸர்வகாருண்யரான ஸர்வேசுவரனுடைய உத்தமமான மதம்.

மேலப்பாவூர்,
S. N. இராமபத்திர அய்யர்.

ஏகாதசத் துவாரகாபுரியை அறியீரோ?

ஏகாதசத் துவாரகாபுரியை யோகி ஒருவரே அறிவார். போகி அறியார். போகத்தை வெறுத்து யோகத்தைப் பெருக்கி துவாரகாபுரிக்குட் சென்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தரிசித்து அனுக்கிரகத்துடன் திரும்பினர் குசேலர் என்ற ஓர் மகாத்மா.

पुरमेकादशद्वारमजस्यावक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते । एतद्वैतत् ॥

कृष्णस्यासीत्सखा कश्चिद्ब्राह्मणो ब्रह्मवित्तमः ।
विरक्त इन्द्रियार्थेषु प्रशान्तात्मा जितेंद्रियः ॥

यदृच्छयोपपन्नेन वर्तमानो गृहाश्रमी ।
तस्य भार्या कुचेलस्य क्षुत्क्षामा च तथाविधा ॥७॥

(ஸ்ரீபாகவதம் 10—80)

பதினொன்று வாயில்கள் அமைந்த பட்டணம் துவாரகாபுரி என்றும், அதில் 'அவக்கிரசேதஸ்' என்று கொண்டாடப்படும் பிறப்பில்லா ஒருவர் இருக்கிறுரென்றும் யாதொருவன் அவரை அனுஷ்டான வழி தெரிந்து தக்கிக்கிறுனில்லையோ, அவன் ஜனன மாண துக்கங்களினின்றும் விடுபடுகிறுன். ஊகித்துப் பார்க்கும்பொழுது பிரதி (மனுஷ) சரீரமும் ஒரு துவாரகாபுரி. ஒவ்வொரு துவாரகாபுரியிலும் ஒரு ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா இருக்கிறுர். ஒவ்வொரு சரீரத்திலும் ஆத்ம ரூபமாய்ப் பிரகாசிக்கும்

ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தெரிசிக்கப் பிரயத்தனப்பட்டு துவாரகா புரிக்குள் (சரீரத்தினுள்) சென்று பரமாத்மாவைப் பூர்ண தர்சனம் செய்த விப்பிர சிரேஷ்டரான குசேல யோகி ஸ்ரீகிருஷ்ணனுக்கு கூடவித்தை கற்ற தோழர். ப்ரம்மவித்தெனப்படுவர். உலக விஷயபோகங்களில் விரக்தியடைந்தவர். கொண்டாடத் தக்க மனோநாசமடைந்தவர். ஐம்புலன்களையும் அடக்கினவர். ஆனால் அவர் அனுஷ்டித்துவந்த ஆசிரமம் கிருஹஸ்தாசிரமம் எதிருச்சமாய் ஏற்பட்டது. அவருக்கு க்ஷுத்க்ஷாமாவென்று ஓர் ஸ்திரீ உண்டு.

பட்டணமாய்விளங்கும் இந்தச் சரீரத்திடை காணப்படும் பதினொன்று வாயில்களையும் ஒருவர் தெரிந்துகொள்ளவேண்டாமா? அவையாவன: உச்சி (மூர்த்தினி,) காதுகள் (2) கண்கள் (2) மூக்குகள் (2) வாய், கொப்பூழ் (நாபி) குறி, மலவழி. ஆகப் பதினொன்று. இரண்டு நீங்கலாக, பாக்கி ஒன்பது வாயில்களே, சாதாரணமாய் மனிதரால் கஷ்டமன்னியில் தெரிந்து கொள்ளப் பட்டனவாய் இருக்கின்றன. உச்சியும், கொப்பூழும் வாயில்களாக இருக்கவில்லை. காதுகள் கேட்கவும், கண்கள் பார்க்கவும், மூக்குகள் மோப்பம் அறியவும், வாய் சாப்பிடவும், குறி, சிறுநீர விடவும், மலவழிகழிக்கவும் பழக்கமாய் இருந்து வருகின்றன. மொத்தம் வாயில்கள் பதினொன்றனுள், கண்டத்திற்குமேலே எட்டும், கீழே மூன்றும் ஏற்பட்டு உள்ளன. மேலேயுள்ள எட்டு வாயில்களில், மூர்த்தினி என்ற உச்சி வாயிலாகக் காணப்படவில்லை. அதேமாதிரி கீழே யுள்ள மூன்று வாயில்களில், நாபி என்ற கொப்பூழ் வாயிலாகக்காணப்படவில்லை. பாக்கி நிற்கும் ஒன்பது வாயில்களும், நரர்களுக்கு போகார்த்தமாய் உபயோகப் பட்டு, சுகதுக்கங்களை உண்டுபண்ணுகின்றன. சுகதுக்க நிவர்த்தியடைதலே ஜீவன் முக்தி. இது நரஜன்மாவில், வழியாய்ப்பாடுபட்டு, அடையவேண்டிய ஒப்பற்றநிலை, நரஜன்மாவில் மிருதிக்குக் காரணக் கருவிகளாய் அமைந்துள்ள ஒன்பது வாயில்களின் பரிசயத்தை வேருடன் ஒழித்து, பத்து (நாபி,) பதினொன்று (உச்சி) வாயில்களைத் திறக்கும்படி அனுஷ்டித்தால், அவர் முடிவில் அடைவது அமிருதத்துவம் என்ற மோக்ஷமே.

ஆகவே, நாபி, மூர்த்தினி, இவ்விரண்டு துவாரங்களையும் பற்றிய திட்டமான ஆராய்ச்சி மனிதருக்கு இன்றியமையாதது. இவ்

விரண்டினுள் ஒன்றான நாபித் துவாரம் ஒரு ஸமயம் தானாகவே திறந்துகிடந்த வாயில், தாயினின்றும் வேறானகாலம் மூடப்பட்டதன்றோ? ஆனால் அப்பொழுது ஒன்பது வாயில்களும் திறக்கப்பட்டன. ஒருகதவு மூடப்பட்டால் ஒன்பது கதவுகள் திறந்து வைக்கப்பட்டன. பெரிய லாபமன்றோ? அன்று, அன்று, அன்று இதனால் நஷ்டமுண்டோ? கணக்கில் அடங்காத நஷ்டம் உண்டாய்விட்டது. எவ்விதம் என்றால்;

...... नवमे मासे संपूर्णो भवति पूर्वजातिं स्मरति......
जातश्चास्मि मृतश्चास्मि संसार्यस्मि पुनः पुनः...
दुःखबीजमिदं जन्मदुःखरूपञ्च दुस्सहम् ।
निवृत्तिधर्मो नोपात्तो न योगज्ञानसाधनम् ।
अहो दुःखोदधौ मग्नो न पश्यामि प्रतिक्रियाम् ।
धिगज्ञानं धिगज्ञानं धिक्कामक्रोधसङ्कटम् ।
संसारशृंखलं धिग्धिगाचार्याज्ज्ञानमाप्नुयाम् ।
यदि योन्यां प्रमुच्यामि तं प्रपद्ये महेश्वरम् ।
....
गर्भावासात् प्रमुच्येयं यदि विष्णुं भजे हृदि ।
वासुदेवं प्रतोष्यामि भगवन्तमनन्यधीः ।
जातमात्रस्तु वैष्णवेण वायुना संस्पृश्यते तदा न स्मरति नैव किञ्चन पारत्रिकं नापरोक्षदृग्भवति ।
भूमि संस्पर्शनाज्जन्तुरुन्मत्तपामरो भवेत् ।

(கர்ப்போபநிஷத்)

தாயின் கர்ப்பத்தில் வஸிக்கும் சிசு ஒன்பதாவது மாதத்தில், பூர்ணலக்ஷணமுள்ள அவயவங்களுடன் விளங்குகிறது. முன் பிறப்பு அதற்கு ஞாபகத்திற்கு வருகிறது. அடிக்கடி பிறந்து, இறந்து, ஸம்ஸாரியாயிருந்து இருக்கிறேன். இந்த ஜன்மமே துக்ககாரணம் ஸகிக்கமுடியாது. நிவர்த்திமார்க்கத்தை அனுஷ்டிப்பதில்லை. யோக ஞான ஸாதனத்தை அடைவதில்லை. ஒவ்வொரு கர்மத்திலும் துக்கமே உண்டாதலை மனத்தால் ப்பார்க்கிறேனில்லை. காமக் குரோதங்களை விளைவிக்கும் அஞ்ஞானத்தை விலக்கு, விலக்கு; ஸம்ஸாரச் சிக்கை விலக்கு, விலக்கு. குருவினிடமிருந்து ஞானத்தையடையவேண்டும். யோனியினின்றும் எப்பொழுது விடுபடுகிறேனோ, அப்பொழுது ஸாங்கியத்தையும் யோகத்தையும் நன்று

கத்தழுவியிருப்பேன். மகேசுவரனை அடைகிறேன். கர்ப்பவாஸத்தினின்றும் விடுபட்டபொழுது, இருதய கமலத்தில் விஷ்ணுவையே ஆராதிக்கிறேன். இதா மூர்த்தித் தியானஞ் செய்யாமல் பகவானான வாசுதேவனையே திருப்திப்படுத்துகிறேன். எனப் பரமாத்மாவைத் துதி செய்துகொண்டிருந்த குழவி, பிறந்தவுடன் உலகவியாபாரம் நிறைந்த விஷக்காற்றினால் நன்றாய்ப் பீடிக்கப்பட்டு அப்பொழுது பூர்வஞானங்கெட்டு, முக்திஞானங்கெட்டு, அபரோக்ஷஞான திருஷ்டியை இழக்கிறது. பூமியின் ஸம்மந்தம் வந்ததினாலே, அது குரூரப்பார்வையோடு கூடிய, அறிவிலியாக ஆய்விடுகின்றது.

ஒருவழி திறந்து வைக்கப்பட்டதால் ஒருவழிப்பட்டு, அங்கொருவழியிலே தென்படும் பரமாத்மாவை ஸ்மரித்திருந்த சிசு, உண்மை விளங்கப்பெற்றதால், உபரி ஜன்மாவிற்கு இடம் கொடாத விதம் ஸத்கர்மாவையே செய்து, பலத்தியாகத்தால் ஜீவன் முக்தனாகி, கிரமமாய்ப் பதினொன்றுவது வாயிலென்ற மூர்த்தினித்துவாராக் கைவல்லியம் பெறலாமென்றது. மண்ணைத்தொட்டதால் பூர்வஞான ஸ்மிருதிகெட்டு, ஸ்ரீபரமாத்ம போதத்தை இழந்தது. இதைவிடப் பெரிய நஷ்டம் இவ்வுலகில் வேறுண்டோ? இல்லை.

பட்டணத்தின் (சரீரத்தின்) ஒன்பது வாயில்களையும் மண் திறந்து விட்டது. திறந்துவைக்கப்பட்டிருந்த தெருவாயில் (நாபியை) அம்மண்ணே அடைக்காமல் அடைத்து விட்டது; முன்போலொத்த உபயோகத்திற்கில்லாமற் செய்துவிட்டது. ஒன்பது வாயில்களும் இப்பொழுது திறந்த கிடப்பதால் பட்டணம் படும்பாடென்ன?

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्यशाखागुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्चमूलान्यनुसन्ततानि कर्मानुबंधीनि मनुष्यलोके ॥

இப்பொழுது, பட்டணத்தில் (சரீரத்தில்) கர்ம பிரஸங்கத்தினால் உண்டான இரைச்சல், பெருங்கடல் முட்டி விட்டதுபோலும், உட் புகுபவர்களுக்கும் வெளிப்போமவர்களுக்கும் பாம்புகளே கூடாதாம். பட்டணத்திற்குள்ளும் ஒவ்வொருவருக்கும் தோன்றிய விதம் நட்மாட்டமாம். எவர் பெரியவர்? எவர் சிறியவர்

சிஷ்டன் யார்? துஷ்டன் யார்? உபசாரம் எது? அபசாரம் எது? புண்ணியம் எது? பாபம் எது? அதிலும் கலியில் சிந்திக்க வொண்ணாத கேடுகள் ஸம்பவிக்கின்றன.

இவ்வாறு துலக்க, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உபதேசித்த இரண்டு வித நிஷ்டைமார்க்கங்களில் ஜீவர்கள் பழகி உய்வது எளிதோ?

लोकेऽस्मिन् द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ।
ज्ञानयोगेन सांख्यानां कर्मयोगेन योगिनाम् ॥

துவாரகாபுரியில் வஸிக்கும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை தரிசித்தல் அவர் ஸகாக்களுக்கு எளிதென பிரமாணங்கள் வெளியிடுகின்றன. ஸ்ரீகிருஷ்ணனுக்கு, அர்ச்சுனனும் ஸகா; குசேலரும் ஸகா, ஸ்ரீபகவான் அர்ச்சுனனுக்குவலிய இழுத்துவைத்து நிஷ்டையைக் காட்டிக் கடைத்தேற்றி வைத்தார். குசேலர், நிஷ்டையைத் தெரிந்து அனுஷ்டித்துப் निराशीर्निर्ममो भूत्वा பரமாத்மாவை யடைந்தார்.

இளமையிலே, அக்ஷரனை பரமாத்மாவுடன் ஸகாவாகவே ண்டும். (பிரத்தியக்ஷமாய்க் கிடைக்காவிட்டாலும் அப்பிரத்தியக்ஷ மாயாவது கிடைக்கவேண்டும்,) என்று எண்ணி 'அக்ஷராப்பியா ஸம்,' என்ற ஓர் ஸம்ஸ்காரத்தை வற்புறுத்தி, பிரும்மவர்ச்சஸகா மனுயிருந்தால், ஐந்தாவது வயதிலே உபநயந ஸம்ஸ்காரத்தையும் செய்வித்து, பிரும்மசர்யத்தை விதிவத்தாய் அனுஷ்டித்து, வேதங்களை கற்றுப் பின்னர் சாஸ்திரங்களின் ஸகாயத்தால் ஆத்ம விசாரம் செய்து யோகி ஆகி, ஏகாதசத்துவாரகாபுரியை அறிவார், பின்னர் அடைவார் சிரேஷ்டரே.

S. N. இராமபத்திர அய்யர்,
மேலப்பாவூர்.

ஸ்ரீ ஜகத்குரு அவர்களின் விஜயயாத்திரை.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகதக்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள், கார்வேட் நகரம் மஹாராஜா அவர்கள் புத்தூரில் வந்து நேரில் பிரார்த்தித்துக் கொண்டதின் பேரில் 4-6-32 காலை ஷை புத்தூரிலிருந்து கார்வேட் நகரம் விஜயமானார்கள். ஷை நகரத்தின் எல்லையில் மஹாராஜா அவர்கள் ஸகலபரிவாரங்களுடன் வந்து ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களை மாலை சூட்டி வரவேற்று பெரியபல்லக்கில் ஆரோஹணம் செய்வித்து ஸகலஸன்னாஹங்களுடன் கிரமபிரதக்ஷிணம்வந்து ஜாகைக்கு விஜயமானார்கள்.

அன்றையதினம் மஹாராஜா அவர்கள் ஸ்ரீஸ்வாமி பூஜாதி ஸத்காரங்களை நடத்திவைத்தார்கள். மறுதினம் 5—6—32-ல் ஷை அரண்மனை அந்தப்புரம் ஸ்திரீ ஜனங்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களுக்கு தங்கபுஷ்பமாரி பொழிந்து பீதாம்பரம் முதலானதுகள் ஸமர்ப்பித்து ஸ்ரீ ஸ்வாமி பூஜாபிருமண ஸந்தர்ப்பணாதிகளை நடத்திவைத்தார்கள். 6—6—32-ல் அவ்வூர் மஹாஜனங்கள் ஸ்ரீ ஸ்வாமி பூஜாதிஸத்காரங்களை நடத்திவைத்தார்கள். 7-6-32ல் மறுபடியும் மஹாராஜா அவர்கள் பிக்ஷை நடத்திவைத்து ஸ்ரீஸ்வாமிகள் அவர்களுக்கு பீதாம்பரமும், யானைக்கு தங்க ஜரிகையினால் பூவேலை செய்த ஜூலும் ஸமர்ப்பிவித்தார்கள்.

ஒவ்வொரு நாளிலும் ஸாயங்காலத்தில் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அவர்கள் பக்தி, சிவபக்தி என்னும் அரிய பெரிய உபன்யாஸங்களைச் செய்தார்கள். 8—6—32 புதன்கிழமையன்று காலையில் புத்தூருக்கு 4-மைல் தூரத்திலுள்ள நாராயணவரம் என்னும் க்ஷேத்திரத்திற்கு விஜயமானார்கள்.

S. ராமாசாரி.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

அச்வதரான்.

1. நாகலோகத்தில் அச்வதரான் என்றோர் நாகனிருந்தான். அவனுக்கு இரு குமாரர்கள். அவர்கள் பூலோகத்திற்கு ப்ரதிதிநம் செல்வர். தந்தை எங்கே போகிறீர்கள்? என்று கேட்டார். ரிதத்வஜன் என்ற ராஜகுமாரன் எங்கள் ஸ்நேஹிதன். அவனைக்கண்டு களித்து வருகிறோம் என்றனர். மித்ரனானால் அவனை ஏன் நம் வீட்டிற்கு அழைத்துவரவில்லை? என்றார்.

2. அவன் மதாலஸை எனும் உத்தம மனைவியை இழந்தான். ஆதலால் எங்கும் செல்வதில்லை. ஸன்யாஸி போலிருக்கிறான் என்றனர். அச்வதரான், புத்ரன் நண்பனுக்கு உபகாரம் செய்ய நினைத்தான். ஸரஸ்வதி தேவியைத் துதித்தான். அவள் என்ன வேண்டுமென்றாள். சிவனைத் துதிக்கப் போகிறேன். என் நாக்கில் நீ ப்ரத்யக்ஷமாக இரு என்றான்.

3. அப்படியே வாணி வாக்கில் ஸான்னித்யமானாள். பல காலம் பரமசிவனைக் குறித்துப் பாடினான். நியமத்துடன் துதித்தான். அவரும் ப்ரத்யக்ஷமாக தர்சனமளித்தார். உனக்கு என்ன வரம் வேண்டுமென்றார். ரிதத்வஜன் மனைவி மதாலஸை புருஷனிறந்தானென்று பொய்யான சொல்லைக்கேட்டு மெய்யாக இறந்தாள். அவள் ஜீவிக்கவேண்டுமென்றான்.

4. இவன் பரோபகாரத்தைக் கண்டு பரமாத்மா ஸந்தோஷமடைந்தார். பித்ருக்களைக்குறித்து ஓர் ச்ராத்தம்செய். அதில் நடுபிண்டத்தைப் புசி. உனது நடு படத்திலிருந்து அவள் வருவாள் என்றார். அப்படியே செய்தான். மதாலஸைப் பிழைத்து வந்தாள். அவளை அச்வதரான் மறைத்து வைத்தான். பிள்ளைகளை நண்பனை அழைத்துவரச் சொன்னான்.

5. நாககுமாரர் ராஜகுமாரனை அழைத்தனர். அவன் பாதாளம் வரவிரும்பவில்லை. என் தந்தை உன்னைப் பார்க்க ஆசை கொண்டார், வா என்றார்கள். பெரியோருக்குப் பணிபவன் பதில் பேசாமல் பாதாளம் வந்தான். அச்வதரான் அவனுக்கு

விருந்து செய்தான். இரண்டு மூன்று நாள் பாதாளத்தில் வைத்திருந்தான். ஊருக்குப் போகும் போது உனக்கு என்ன வேண்டுமென்றான்.

6. ராஜகுமாரன்உங்களருளால் எல்லாமிருக்கிறது. ஆயினும் தர்மத்தில் புத்தி இருக்கும்படி வரம் கொடுமென்றான். நாகராஜன் ஏற்கனவே நீ தர்மசாலி. பூமியில் கிடைக்காத வஸ்தைக்கேள் என்றான். ராஜகுமாரன் நாககுமாரர்களைப் பார்த்தான். அவர்கள் குறிப்பை அறிந்தனர். மதாலஸை தான் மன்னனுக்கு கிடைக்காத வஸ்து என்றனர்.

7. நாகன் அரசே இது வாஸ்தவமா? அரசன் நிஜந்தான். மாயையால் அவளைக் காட்டினாலும் போதும். உடனே மதாலஸையை அழைத்து வந்தான். அரசனவளை ஆலிங்கனம் செய்யப் போனான். நாகன் அரசே மாயை மதாலஸை அவள். தொடாதே. தொட்டால் மறைந்து விடுவாளவள் என்றான். அரசன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

8. நாகராஜன் அரசன் களையை நீக்கினான். உண்மையை உரைத்தான். மதாலஸையுடன் வீட்டிற்குப் போகலாமென்றான். ரிதத்வஜன் தனக்காக நாகன் செய்ததை நினைத்தான். அவனது பரோபகாரசிந்தையை மெச்சினான். அவன் தந்தையிடம்அவரை அறிமுகம் செய்து வைத்தான். அவனும் இவரைக் கொண்டாடினார்.

9. ரிதத்வஜனும் மதாலஸையும் ஒன்றுகூடி மகிழ்ந்தனர். பரோபகாரமே புண்யம். பரரை உபத்ரவிப்பதே பாபம என்றபடி ஒரு பயனையும் விரும்பாமல் இவனுபகாரம் செய்தான். தம்பதிகள் அவர்களைப் போல் ஒத்திருக்கவேண்டும். நண்பர்கள் இவர்களைப்போல் ஒத்து இருக்கவேண்டும். அசுவதரனைப் போல் பரோபகாரம் செய்யவேண்டும்.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

நல்லவேலை.— 4உ காசியில் தாரகோபதேசம்புரியும் விச்வேச்வரனது ஆலயத்தில் சண்டாளர் ஒன்று கூடி ஊர்வலமாக வந்து உள்ளேநுழைய உத்தேசித்தனர். அரசாங்க அதிகாரி இங்ஙனம் கூடாதெனத் தடுத்துவிட்டார். இதுதான் சரியான வேலை. அனாதியாயுள்ள ஆசாரத்தை மீறுவோர் அரசசிக்ஷைக்காளாகாவிடினும் தைவசிக்ஷைக் குரியவரே. இப்பாபச் செயலில் புகாது தடுத்தஅதிகாரி ஆஸ்திகன் ஆசீர்வாதத்திற்கு உரியவர் ஆவர்.

ராமபக்தி:— 5உ சென்னைக்கடுத்த வில்லிவாக்கத்தில் ஸ்ரீராமநவமி முதல் நாளது வரை பகவச்சரிதம் உபன்யாசம் நடத்தப்பட்டு பூர்த்தியன்று விசேஷபூஜை ஊர்வலம் பஜனை சந்தர்ப்பணை முதலியவைகளை சில ஆஸ்திகர் ஒன்றுகூடி நடத்தினர். இதில் சிறப்பாக நடந்தது அன்னதானம். பக்தர்கள் இஷ்டத்தை பகவான் பூர்த்திசெய்வர்.

முயற்சிக்கேற்றபலன்:— 7உ மைசூர் டௌன்ஹாலில் ஓர் ஆஸ்திகர் ஸபை கூடி சாரதாசட்டத்தைக் கண்டித்தது. மைசூரில் 12-வயதிற்கு குறைந்த பெண்களுக்கு விவாஹம் செய்யக் கூடாதென்று ஓர் சட்டம் இருக்கிறது. 14-வயதிற்கு விவாக வயதை உயர்த்த சட்டம் அங்கும் வற்புறுத்தப்பட்டது. எதிர்கிளர்ச்சியால் வைதிகஸம்ஸ்காரம் என்ற காரணத்துடன் இளவயதிலே விவாஹம் செய்ய லௌகிக காரணத்தையும் காட்டி அரசாங்க உத்திரவு பெறுவர் சிக்ஷிக்கப்படமாட்டார். இந்த லௌகிக காரியங்கூட நமக்கில்லை. ஏன் தக்க முயற்சியில்லை.

ரஸமானபதில்:—7உ பாம்பேசீர்திருத்தக்காரர் சண்டாளர்களை ஆலயத்தில் அநுமதிக்கும்படி வைதிகர்களுக்கோர் விண்ணப்பம் செய்தனர். வர்ணாசிரம ஸபை கார்யதரிசி சமூகச்சச்சரவுள்ள இச்சமயத்தில் வீண் சண்டையைக் கிளப்பாதீர்கள். சண்டாளருக்கு வேண்டிய தன உதவி முதலிய ஸௌகரியங்களைச் செய்தால் போரும். ஆலயங்கட்டிய தர்மகர்த்தாவின் இஷ்டத்திற்கும் தர்மத்திற்கும் விரோதமானகார்யத்தைச் செய்யஎவருக்கும் அதிகாரமில்லை என்றார்.

அசக்தபோஷணம்:— மேமீ 18௳ பெங்களூரில் பொது ஜன ஸஹாயத்தைக் கொண்டு கூன், குருடு, கிழம், நொண்டி முதலியவர்களை ரக்ஷிக்கும் ஸபைக்கு ஓர் புதுகட்டடம் அவ்வூர் திவானால் திறக்கப்பட்டது. திவான் ஐயாயிரம் ரூபாய் அதற்களித்தார். மிக உலகம் தாராளமாக தன உதவிபுரிய வேண்டினார். தர்மத்திற்கு உதவிசெய்த இவரை யார்தான் போற்றாதிருப்பார்.

முயற்சி திருவினையாகுக! 18 19௳ திருவிடமருதூரில் தஞ்சை பிராம்மணஸபை கூடிற்று. தென்னாட்டில் இஃதொன்றே கிஞ்சித்ஜீவகலையுடனிருக்கிறது, இதன் முழுமுயற்சியும் சாரதா சட்டத்தைத் துலைக்கவும் பிராமண குழந்தைகள் வேதஸந்த்யாதிகளை விடாமலிருக்கவும் முதலில் செல்லவேண்டும்.

ஜயமுண்டு பயமில்லை 9௳ கள்ளிக்கோட்டை முனிஸிபல் ஸ்கூலில் சண்டாளனைச் சேர்த்ததால் மற்ற ஜாதி மாணவர் பாடசாலைக்குப் போகாமலிருந்து விட்டனர். தர்மத்தை நம்பி இதில் த்ருடநம்பிக்கையோடிருந்தால் முடிவில் ஜயமுண்டாகும் அதவா வர்ணாச்ரம தர்மத்தைக்கெடுக்கும் இக்கல்வியைவிட்டு நமது வேத மார்க்கத்தைக் அவலம்பிக்கும்படி ஈசன் செய்யும் வேலையில் இதுவும் ஒன்றோ?

ராஜனும் ராணியும் வாழ்க! 4௳ கார்வேட் நகரம் மஹாராஜா ஸ்ரீஜகத்குரு பகவத்பாதாளை வரவேற்று உபசரித்தார் அந்தப்புர ஸ்திரீகள் தனியாக ஸ்ரீபரமாசார்யாளைப் பூஜித்தார்கள். ஸ்வர்ண புஷ்பமும் பீதாம்பரமும் பரிசளிக்கப்பட்டது ஸ்ரீகருணாமூர்த்தியான குருமூர்த்தி ப்ரஸன்னகம்பீரமான தனது அம்ருத மொழியைப் பொழிந்தார்கள். இவ்வரசனது பாக்யமே பாக்யம். ஸத்பாத்ரத்தைத் தேடி ஸதாசாரத்தைக்கைக்கொண்ட ஸன்மார்க்கத்தை அவலம்பித்து அரசன் குறைவற்ற செல்வத்துடன் நீண்டகாலம் வாழ்வான்.

மூன்று நாளில் சிக்ஷை! 11௳கள்ளிக்கோட்டையில் பி. எஸ். சுப்ரமண்யய்யர் லைகதி செய்யப்பட்டார். 8௳ அவர் ஓர் பறப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டார். திருட்டு நகை விற்றார் என்ற வியாஜத்தால் வர்ணாச்ரமதர்மத்தைக் குலைத்த இவரை பகவான் சிக்ஷித்தார் போலும். ஆசார சீர்திருத்தம் அதர்மத்தில் கொண்டுவிடுமென்பதற்கு வேறு சாக்ஷிவேண்டுமோ?

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவசர்மா.